சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி ஆண்டு (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஞ புரட்டாதிமீ சஉ (1946 செப்டெம்பர் 20 வெள்ளிக்கிழமை) [இல சஎ

# உணவுப்பஞ்சத்துக்குஉண்மைக்காரணம்

## அரசாங்கம் கைக்கொள்ளும் தீயமுறை

### அரசியல்வாதிகளே இதற்குப் பொறுப்பு

பொறுப்பினின்றும் தப்ப முடியாது — போலிக் காரணமும் காட்ட முடியாது

**1 படி அரிசி 3 ரூபா விற்பதன் காரணம்**

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

**ஜனநாயக ஆட்சியில்**

இத்தகைய ஓர்கேவல நிலை ஜனநாயகம்நிலவும் எந்தநாடுகளிலாவதிருக்குமாயின், இதற்குக்காரணபூதராயுள்ளவர் தேசத்துரோகிகள் என மதிக்கப்பட்டு, பகிரங்கமாக விசாரணை செய்யப்பட்டுத் தண்டனை விதிக்கப்படுவர், இது பொது ஜனங்களால், பொது ஜனங்களுக்காக, பொதுஜனங்கள் அரசுபுரியும் நாடுகளில். ஆனால் இந்த இலங்கையிலே - இப்படியான பதவி வேட்டுவரான சுயநலமிகள் கையிலே நின்று தத்தளிக்கப் பாவம் செய்துள்ள இலங்கையிலே இவர்கள் இன்றும் பதவியில் இருக்கின்றதோடு அமையாது, இன்றும் அந்த அதிகார பதவியில் இருக்கக் கங்கணங்கட்டி அதற்கான முயற்சிகளையும் செய்து வருகின்றனர்.

○

**எல்லாரும் பொறுப்பாளிகள்**

எங்கள இலங்கையில், எங்கள் நாட்டு மக்கள் இன்று பட்டினி, பசி, துன்பத்துடனும், மானம் காக்க வகையறியாது அரை நிர்வாணத்துடனும் காலங் கழிப்பதற்குச்சேனநாயக்காக் கோஷ்டி மாத்திரம் பொறுப்பாளியல்லரென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்காமலிருக்க முடியாது. இந்தப் பதினைந்து ஆண்டு காலத்திலும் இங்கே அமுலில் இருந்து வருவது நிருவாகசபை ஆட்சி முறை. இந்த ஆட்சி முறைப்படி நாட்டின் நலத்துக்கான கைங்கரியங்களைச் செய்யவும், செய்விக்கவும், அரசாங்க சபையிலுள்ள ஒவ்வொரு தனி அங்கத்தவர்க்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. இங்கே 'கபினற்'' எனப்படும் ஆட்சிமுறை நடக்கவில்லை இந்த நிருவாக சபை ஆட்சிமுறையில் தமக்கு அளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தக் கருமம் ஆற்றினேன் என்று ஒருவராவது தலை நிமிர்ந்து கூற முடியுமா என்று கேட்கிறேன்! இந்தப் பிரதிநிதிகள் என்றிருந்தவர்கள் அரசாங்க சபையிலே பெருஞ் சொற்பொழிவுகள் செய்யவும், அச்சொற்பொழிவுகள் பத்திரிகைகளில் ஒழுங்காக வெளிவருகின்றனவா என்பதை அவதானித்து அதற்கு ஏற்றன செய்வதிலும், மாதந்தோறும் தமக்குரிய வேதனத்தைத் தவறாது பெறுவதிலுமே தம் காலம் முழுவதையும் துர்விநியோகப் படுத்தினரன்றி, நாட்டின் நன்மைக்கான கைங்கரியங்களில் தம் நேரத்தை உபயோகிக்கவில்லை.

○

**மார்க்கங்கள் என்ன?**

எங்கள் நாட்டிலேயுள்ள வறுமைப் பிணியைப் போக்குதற்கான மார்க்கங்கள் என்ன? முதலாவது வேளாண்மையை அபிவிருத்திசெய்யவேண்டும். எங்கள் நாட்டுப் பிரதிநிதிகள் 15 ஆண்டு காலமாக அதிகாரம் வகித்தும் நாம் அன்று இருந்த நிலைமையிலேயே இருக்கின்றோம். விவசாய முயற்சி குன்றியது யாரால்? இந்தச் சீர்கெட்ட அரசாங்கத்தாலேயே விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை நசுக்கக் கங்கணங் கட்டியுள்ளனர் எங்கள் நாட்டு அரசியல் வாதிகள். நாட்டிலே உணவுப் பொருள் இல்லை; எனவே உணவுப் பொருள்களை விருத்தி செய்யுங்கள் என்கிறார் சேனநாயக்கா! ஆனால் விவசாயிகளிடம் ஒரு புசல் நெல்லை 6 ரூபாவுக்கு மேல் வாங்க மறுக்கிறார் இவர். இக்காலத்தில் விவசாயச் செலவு என்ன? ஒரு புசல் நெல் விளைவிக்க ஓர் விவசாயிக்கு 15 ரூபாவுக்கு மேல் செலவாகிறது. ஆனால் மிஸ்ரர் சேனநாயக்கா, வேண்டுமென்று விவசாயிகளை நசுக்குவதற்காக 6 ரூபாவுக்கு மேல் ஒருசதமேனும் தரமுடியாது என்று பிடிவாதஞ் செய்கிறார். பாடுபட்டு நட்டத்தில் அரசாங்கத்துக்கு விற்பதற்கு விவசாயி தன்வீட்டுப் பணத்தைக் கொட்ட முடியுமா? எனவே, அவர்கள் அத்தொழிலைக் கைவிட்டு, நெல்விளைந்த கழனிகளைப் புறக்கணிக்கிறார்கள். அப்படியில்லையென்றுவிளைவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயி, தன்னிடமுள்ள நெல்லை எப்படியோ மறைத்து வெளியில் கூடிய விலைக்கு விற்கிறார். அரசாங்கம் அவர்க்கு நீதியான விலை கொடுத்து அவருடைய நெல்லை வாங்குமேயானால், இன்று ஒருபடி அரிசி 3 ரூபாவுக்கு விற்கப்படமாட்டாது. எனவே இன்று நெல் அரிசியில் கள்ளவியாபாரம் நிகழுகிறது என்றால் அதற்கு முழுப் பொறுப்பாளி விவசாய மந்திரி மிஸ்ரர் சேனநாயக்காவெனலாம். அவர்மாத்திரமல்ல, இந்தப்பொல்லாத, பழிபாவத்துக்கிடமான, ஏழைகள் தம்கால்வயிற்றுச் சோற்றுக்காக இரத்தக் கண்ணீர் விடுவதற்கானநிலைமைக்கு அரசாங்கசபையில் உள்ளஒவ்வொரு பிரதிநிதியும் பொறுப்பாளிதான்! அதனை இன்று எவராவது மறுக்க முடியாது.

# ஹிட்லரின்நண்பன்

## இறக்கவில்லை; உயிருடன் இருக்கிறாராம்

ஹிட்லரின் பிரதி யுத்தியோகத்தராகவும், அவருடைய அந்தரங்க நண்பனாகவும் இருந்த மார்ட்டின் போர்மன் என்பவர், ஜெர்மன் யுத்தத்தில் இறந்துவிட்டதாகச் செய்தி முந்திவந்தது ஆனால் அவர் உண்மையில் இறக்கவில்லை, அவர் உயிருடன்தான் இரகசியமாகஇருக்கிறார் என்று போலந்து நாட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது.

மார்ட்டின் போர்மன் எங்கோ மறைவாக இருந்துகொண்டு, இரகசியமான ஓர் ரேடியோக் கருவிமூலம், ஜெர்மன் மக்களுக்குப் பிரசாரம் செய்து வருகிறாராம்.

தான் நேசதேசப் படைகளுக்கு அகப்படாமல் சுகமேயிருப்பதாகவும், ஜெர்மனியில் உள்ளவர்கள் அமைதியுடன் இருக்க வேண்டும் என்றும் பெரிய பெரிய சம்பவங்கள் திடீரென நடக்கப்போகின்றனவாதலால் அவற்றுக்கு ஆயத்தமாகவிருக்க வேண்டுமென்றும் மார்ட்டின் போர்மன் இந்த இரகசிய ரேடியோமூலம் செய்தி விடுத்திருக்கிறாராம்.

நேசதேசப் படைகளுக்கு அகப்படாமல் ஒருவிதமாகத் தாமும் தம்முடைய ஆட்களும் சுகமே வெளியேறிவிட்டதாகவும் மார்ட்டின் போர்மன் ரேடியோ மூலம் அறிவித்தாராம்!

### இன்னோர் பொய்ச் சாட்சி

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் ராயப்பர் என்னும் ஓர் சாட்சி பொய்த் தகவல் கொடுத்தமைக்காக ஒருவருஷச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

# அடுத்த தொழில் மந்திரி யார்?

## இராஜ குலேந்திரனுக்கு வாய்க்காதாம்

மிஸ்ரர் கொறியா லண்டனுக்குச் செல்லுவதுடன், அரசாங்கசபைக் கைத்தொழில் நிருவாகசபை தொழில் மந்திரியாக யாரைத் தெரிவுசெய்யும்? இந்தப் பிரச்சினை இப்போது கிளம்பி, எல்லாரது மனத்தையும் கவர்ந்திருக்கிறது. இந்நிருவாகசபையின் அங்கத்தவர்கள் பின்வருவோராவர்:

மிஸ்ரர் இராஜா ஹீவாவித்தாரணை
,, A P ஜெயசூரியா
,, ஐ எக்ஸ். பெரீரா
,, கோ. நடேசஐயர்
,, R. E. ஜெயத்திலகா
,, J. G. இராஜகுலேந்திரன்
,, R G ஸ்பென்ஸ்
,, ஜி வி. எஸ். கொறியா

தொழில்மந்திரி மிஸ்ரர்கொறியா, இங்கே இல்லாத காலங்களில், இராஜா ஹீவவித்தாரணை, ஐ. எக்ஸ். பெரீரா, இராஜகுலேந்திரன் என்பவர்கள் பலமுறைகளில் மந்திரியாகக் கடமை பார்த்திருக்கின்றனர். இம்முறை, மிஸ்ரர் ஹீவவித்தாரணையும், இராஜகுலேந்திரனும் இப் பதவிக்காகப் போட்டியிடுவர் என்று தெரிகிறது.

மிஸ்ரர் ஹீவவித்தாரணைக்குச் சார்பாக, A P ஜெயசூரிய, R E ஜெயத்திலகா, ஸ்பென்ஸ் என்பவர்களின் சம்மதம் நிச்சயமாகக் கிடைக்கும் என்று தெரிகிறது. மிஸ்ரர் ஐ. எக்ஸ். பெரீரா ஓர் இந்தியராகவிருந்தபோதிலும், வர்த்தகமுறையினால் ஏற்பட்டுள்ள தொடர்புபற்றி அவர் அநேகமாக மிஸ்ரர் ஹீவவித்தாரணைக்கே சாதகமாக நிற்பார் என்றும் சொல்லப்படுகிறது. அப்படியானால் மிஸ்ரர் ஹீவவித்தாரணையே அடுத்த தொழில்மந்திரியாகலாம்.

# எங்கள் தமிழ்

தேசீய வீரக்கவி, நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை

தமிழென்று தருகின்ற
தனியந்தப் பெயரில்
அமிழ்தென்று வருகின்ற
அதுவந்து சேரும்
நமதிந்தப் பெயர்கொண்ட
மொழியென்ற எண்ணம்
தமிழர்க்குப் புகழ்மிக்க
தருமென்றல் திண்ணம்

'தமிழ்' என்ற பெயரைச் சொன்னவுடனேயே 'அமிழ்து' என்றசொல் நினைவுக்கு வரும். 'அமிழ்து' என்றால் அமிர்தம். அமிர்தம் சிரஞ்சீவியாக்கும்குணமுடையது. தமிழ்மொழியும் 'என்றுமுள தென்றமிழ்' என்று கம்பன் சொன்னதுபோல சிரஞ்சீவியானது. நம்முடைய அறிவுக்கு அழியாத்தன்மையைக் கொடுத்துப் பாதுகாப்பதனாலும் தமிழ் அமிர்தத்துக்குச் சமானம் என்பது பொருந்தும். 'தமிழ்' என்ற பதமும் 'அமிழ்து' என்ற பதமும் அர்த்தத்தில் சம்பந்தப்பட்டிருப்பது மட்டு மல்லாமல் 'தமிழ்' என்ற பதமே 'அமிழ்து' என்ற பதத்தின் திரிபான உச்சரிப்பாக இருக்கிறது. 'அமிழ்து' என்ற பதத்தைத்திருப்பி வேகமாக உச்சரித்தால் 'தமிழ்' என்ற ஓசைதான் உண்டாகும். 'மரா' என்றபதத்தைத்திருப்பித் திருப்பிச் சொன்னால் 'ராம' என்ற ஒலி உண்டாவதுபோல சாவதானமாகச் சொல்லிப்பாருங்கள்.

அமிழ்தம் என்று பெயருள்ள மொழி நம்முடையது, என்று எண்ணுந்தோறும் தமிழர்களுக்குப் பெருமை தரும் என்பது திண்ணம்.

பயிருக்கு நீர்என்ற
பயன்மிக்க வழியே
உயிருக்கு வெகுநல்ல
உணர்வுள்ள மொழியே
துயருற்ற மனதிற்குத்
துணைநின்று உதவும்
அயர்வற்ற ஞானத்தை
அடைவிக்கும் அதுவே.

பயிரின் வளர்ச்சிக்கு அத்யாவசியமான ஊட்டத்தைத் தருகன்ற தண்ணீரைப்போல ஆன்மாவின் வளர்ச்சிக்கு அத்யாவசியமான உணர்ச்சிக

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஷ
புரட்டாதிமீ சஉ வெள்ளிக்கிழமை

## உடு புடைவைக் கஷ்டம்

I

இக்காலத்திற் கட்டுப்பாட்டு உணவுக்குரிய பொருள்களாகிய கோதுமை யரிசி, மா, நெல், அரிசி யென்னு மிவைகளுள் கோதுமை யரிசி சில மாசங்களாக அறவே இறககுமதி செய்யப்படா தொழிந்த தெனினும், மாவின் விகிதம் குறைந்து குறைந்து வந்து கூப்பனுக்கு ஒரு ருத்தலாக விதிக்கப்படலாயிற் றெனினும், இப்போதைக்கு ஒருபடி அரிசி விகிதம் குறையமாட்டா தென்றும், அடுத்த மாசந் தொட்டு ஒன்றரைப் படி விகிதம்கிடைக்குமென்றும், இங்குள்ள மக்கள் பசியுடையரெனினும், அந்தப் பசியோடும் ஒருவாறு மனமாறி யிருக்கிறார்கள். ஆனல், உடை விஷயமாகவெனிலோ, இலங்கை மக்கள் எந்த நேரமுஞ் சஞ்சலத்துடன் கூடியவர்களாகவே காணப்படுகின்றனர்; இந்தியாவி லிருந்தாக, அமெரிக்காவி லிருந்தாக துணிகள் இந் நாட்டின் பொருட்டு ஏற்றுமதி செய்தல் காலந்தோறுங் குறைந்து கொண்டே வருகிறதெனலாம். உண்ணுமல் இரண்டொரு நாள் இருப்பதற்குப் பயின்று கொண்டவர்களை உலகத்திலே காணலாம்; ஆனல் உடையில்லாமல் ஒரு நிமிஷமேனும் இருத்தல் உலக வாழ்க்கைக்கு முடியாதன்றே! ''சாண் ஏற, முழம் சறுக்கியவாறு'' யுத்தம் முடிந்து நாள்கள் ஏறியேறி மாசங்களாகிக் கழிந்து விடவும், வெற்றியாண்டு விழாக் கொண்டாடுதற்கு இன்னும் இரண்டொரு மாச மிருப்பவும், உடை விஷயம் விருத்தியடையாது கீழே இறங்க இறங்க, உடைப் பஞ்சமே தலைப்பட்டு வருகிறது.

யுத்தம் முடிந்து சில காலத்துள் உடைக் கட்டுப்பாடு உணவுக் கட்டுப்பாடுகள் நீங்கிவிடுமென்ற ஆவலோ டிருந்த இலங்கை மக்கள், அக் கட்டுப்பாடுகள் காலகதியில் மேலும் மேலும் இறுகி வருதலைக் கண்டு ஏக்கமுறுகின்றனர்; புடைவை வாங்கும்பொருட்டுத் தங்கள் தங்களுக்குரியபுடைவைக்கூப்பனைப்புத்தகவடிவமாகக்கொண்டுபோய், ஆகவேண்டிய ''பொயின்ஸ்'' துண்டுகளைக் கொடுத்துப் புடைவையை வாங்கிவருதலோ டமையாது, புடைவை வாங்கச் செல்வோர் தங்களுடைய அரிசிக் கூப்பனையும் உடன் கொண்டு போய்ப் புடைவை வியாபாரிக்குக் காட்டவேண்டுமெனப் பிரமாணம் இப்பொழுது விதிக்கப்படலாயிற்று. புடைவைக் கூப்பன் அரிசிநெற் கூப்பன் சீனிக்கூப்பன் என்று சொல்லப்படுகின்ற கூப்பன்களை இங்குள்ள ஏழை மக்கள் தவறிப் போகாமற் காப்பதற்குப் படுங் கஷ்டம் இந்நாளில், தத்தம் பிராணனைக் காப்பாற்றுதற்குப் படுங் கஷ்டத்தைக் காட்டிலும் அதிகமான தெனலாம். காரணம் இங்குள்ள மக்களுட் பெரும்பாலார் எழுதவாசிக்க அறியா ஏழைகளாயிருத்தல்தான். இந்த ஏழை மக்கள் புடைவைக் கட்டுப்பாட்டதிகாரிகள் காலந்தோறும் வெளியிடும் பிரமாணத்தைப் படிக்க அறியாதவர்கள்; ஒருவாறு படித்தாலும் விளங்கும் ஆற்ற லற்றவர்கள்; அதனுற் புடைவை வியாபாரிகள் சொல்லும் பிரமாணத்தையே சிரமேல் வகித்து, இந்தக் கூப்பன் அந்தக் கூப்பன் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, பணமுந் தேடிக்கொண்டு போனல், அங்கே இவர்கள் கேட்கும் புடைவை ''இல்லை'' என்று வியாபாரிமார் சொல்லமாட்டார்கள்; அது வியாபார முறையாகும்; ஆனதனல் ''இருந்தது விற்ருய்விட்டது, இன்னுஞ் சில நாட்களில் வந்துவிடும்'' என்று இதமாகச் சொல்ல, கடைக்குப் போன ஏழைகள் இருவகைக் கூப்பன்களையும், கடன்பட்டுக் கொண்டு போன பணத்தையும் கொண்டு மன முடைந்தவர்களாய் வீட்டிற்கு வரவேண்டியவர்களாவர்; புடைவை வாங்கப் போனவர் இந்த நிலையில் மீண்டு வரும் போது, வீட்டிலுள்ள மனைவி மக்கள் முதலானேர் ''சேலையெங்கே, சீத்தையெங்கே, சால்வையெங்கே'' என்று கேட்க, கடைக்காரன் இவருக்குச் சொன்ன மறுமொழியை இவர் மனைவி மக்களா யுள்ளார்க்குச் சொல்லும்போது, கேட்கும் அவர்களுடைய உள்ளம் என்னபாடுபடு மென்பதைச் சொல்லவும் வேண்டுமா? சுருங்கச் சொல்லுகில், இப்படியான அநர்த்தங்களுக்கும், புடைவைச் சோர வியாபாரம் அதிகப்பட்டு நடப்பதற்குங் காரணம் இந்த நாட்டிலே புடைவைக் கூப்பன் இருக்கும் நேரத்திலே, கடையிலே புடைவை இல்லா தொழிதலும், புடைவை ஏதுங் கிடைக்கக் கூடிய நேரத்திலே, காலம் வரையறுத்துச் சனங்களுக்கு அதிகாரிகள் உரிய கூப்பன்களை வழங்காம லிருத்தலுமேயாகுமெனலாம்.

அன்றியும், சோரவியாபாரம் அதிகப்படுகிறதெனச் சொல்ல, சனங்கள் உடுக்கத் துணிவாங்கும் விஷயத்திலே மேலும் கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் விதிக்கும் கட்டுப்பாட்டதிகாரிகள், இந்தச் சோரவியாபாரத்தை நடவாமற் கட்டுப்படுத்த இன்னமும் வழி காண்கின்றிலரே; இலங்கையிலுள்ள மக்களுக்கு உதவுதற்குப் போதிய புடைவை யில்லையென்று இலங்கை யதிகாரிகளும் அவர்களுட்பட்ட இந்தக் கட்டுப்பாட்டதிகாரிகளுஞ் சிரமப்பட, சோரவியாபாரத்திற்கு மாத்திரம் போதிய துணி அகப்படுவதெப்படி யென்ற கேள்வி பிறக்கின்றதே; இதற்குச் சொல்லுஞ் சமாதானமென்ன?

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—117)

### ''துடைக்கினும் போகேன்''

இரஞ்சிதத்தின் மாமனர் தம்முடைய பெரிய இல்லத்திலே அவர்களனைவரையும் வைத்து உபசரித்தார்; இரஞ்சிதம் தன் மாமனருடைய வீட்டைவிட்டுத் தான் போனபின் நடந்த வரலாறு முழுவதையும் தன் மாமனர் பெற்றார்முதலியவர்களக்கு விபரமாகச் சொன்னள்; இராமச்சந்திரனும் இரஞ்சிதத்தைத் தான் தேடிப் புறப்பட்ட நாள் தொடக்கம் அற்றைவரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்றும் தவருமல் எடுத்துச் சொன்னன்; அதன்பின்னர் இங்கிதத்தின் வரலாறு முழுவதையும், அந்தப் பெண் தங்களுக்கு முந்திச் சொன்னபிரகாரம் இராமச்சந்திரன் அங்கிருப்பவர்களுக்குக் கூறினன்; தோற்றத்திலும் குணாடை முதலியவற்றிலும் இரஞ்சிதத்திற்கும் இங்கிதத்திற்கும் அதிக வேற்றுமையில்லாமையைப் பார்த்து, ''இருவரும் ஒருவயிற்றிற் பிறந்த பிள்ளைகள் போற் காணப்படுகிறீர்கள்'' என்ருர் இரஞ்சிதத்தின் மாமனர்; இப்பிறப்பிலில்லாவிட்டாலும், நாங்களிருவரும் முற்பிறப்பிலாயினும் சகோதரங்களாகப் பிறந்திருக்கக்கூடும்'' என்று இங்கிதத்தைப் பார்த்தவண்ணஞ் சொன்னள் இரஞ்சிதம்; இரஞ்சிதத்தின் மாமனர் இங்கிதத்தை அன்புடன் பார்த்து, ''மகளே, உம்முடைய வரலாறெல்லாம் இப்பொழுது சொல்லக் கேட்டறிந்தோம்: நீரும் எங்கள் வருணத்தைச் சேர்ந்துள்ளீரென்பது எங்களெல்லாருக்கும் வெகு சந்தோஷம்; உம்மை எங்களுடைய அபிமான புத்திரியாக மதித்துப் பேணி வளர்க்கவிரும்புகிறேம். உம்முடைய சம்மதமென்ன'' என்று அன்புடன் கேட்டார்; ''மாமா, என் அருமைத் தங்கைச்சியைக் கேட்பதென்ன; என்னைவிட்டுப் பிரிந்து போதற்கு என் அருமையான சகோதரியை நான் விடமாட்டேன்; நாங்களே எங்கள் தங்கையை இங்கே உடன் வைத்துப் பேணி வளர்த்து, ஏற்ற காலத்திற் செய்யவேண்டிய மங்கல கருமங்களையும், இறைவனருளால் நிறைவேற்றி வைத்தல் வேண்டும்'' என்று அன்பு ததும்பச் சொன்னள் இரஞ்சிதம்: ''அதுதான் முறையாகும்'' என்ருர்கள் அங்கிருந்தாரனைவரும்' ''என் அம்மா, ஒன்றும் பேசாமலிருக்கிறீர்'' என்று பரிவுடன் இரஞ்சிதத்தைக் கேட்டான் இராமச்சந்திரன்; 'பேசுவதென்ன, அண்ணு, ஆருமற்றூர்க்குத் தெய்வந் துணையென்ற உண்மையை மனத்திற்கொண்டு, தலயாத்திரை, தீர்த்தயாத்திரை செய்து மறுமைக்காயினும் நல்வழியைத் தேடலாமெனச் சிந்தித்து, இருந்தவிடத்தைவிட்டு இரகசியமாகப் புறப்பட்டு வந்த என்னை, அந்த இறைவன் உங்களுடன் கொண்டுவந்து சேர்த்துவிட்டான்; அவனருளின்றி ஏதும்நடப்பதில்லை' இச்செயல் தெய்வசித்தம்; உங்களைப் போன்ற இனிய உற்றூர் எனக்குக் கிடைக்கப்போவதில்லை; 'நல்லாரோடிணங்கியிருப்பதுவும் நன்றே'' என்று சொல்வர்; ஆனதால், ''துடைக்கினும் போகேன்'' என்ற பிரகாரம் நீங்கள் தாம் என்னைப் புறக்கணித்தாலும் உயிருள்ளபரியந்தம் உங்களைவிட்டுப் போகமாட்டேன்'' என்று கண்ணில் நீர் ததும்பக் கரைந்தாள் இங்கிதம்; ''என் அம்மா அப்படிச் சொல்லுகிறீர், உம்மையும் ஒருவர் புறக்கணிக்க மனந்துணிவாரோ; நீர் கவலைப்படவேண்டாம்'' என்று ஆதரவுடன் சொல்லி இரஞ்சிதத்தின் முழுமதியன்ன முகத்தைத் தன் காந்தள் மலர்போன்ற கையினல் தடவி அவள் கண்ணினின்று நீரைத் துடைத்தாள் இரஞ்சிதம். இக்காட்சி அங்கிருந்தோர் அனைவர் மனதையும் உருக்கிவிட்டது. இரஞ்சிதம் இராமச்சந்திரனென்னு மிவர்கள் மீண்டு வந்துவிட்டார்களென்ற செய்தியைக் கேள்வியுற்று, அயலட்டத்திலுள்ளார் ஆவலோடு அவர்களைப் பார்க்க வருவாராயினர்.

### ''தெய்வத்திற்கும் சம்மதமானல் மறுத்து நிற்க முடியுமோ''

வந்தவர்கள் இரஞ்சிதத்தையும் இராமச்சந்திரனையும் பாராட்டிச் சென்றனர். இங்ஙனமாக, ஒருநாள் இரஞ்சிதத்தின் மாமனர் தனியேயிருக்கும்போது, விசுவநாதனும் விசாலாட்சியும், தாங்கள் ஊருக்கு மீண்டு போதல் வேண்டுமென்றும் தாங்கள் வந்த நோக்கம் இராமச்சந்திரனுக்கும் இரஞ்சிதத்திற்கும் விவாகத்தை நிறைவேற்றி வைத்தற்கேயென்றுந் தெரிவித்தார்கள். அதனைக் கேட்ட இரஞ்சிதத்தின் மாமனர் ''அவர்களிருவருக்கும் விவாகஞ் செய்து கொள்ளுதல் சம்மதமோ'' என்று மகிழ்ச்சியுடன் வினவ, இராமச்சந்திரனுக்குச் சம்மதம், இரஞ்சிதம் ஆரம்பத்தில் விவாகஞ் செய்வதற்கு உடம்படவில்லை: ஆனல் தெய்வ சம்மதமென்றும அதனல் ஒரு பிழையுமில்லையென்றும் நாங்கள் பலர் சொன்னபின்பு, ஒருவாறு இசைந்திருப்பதாக எண்ணக் கிடக்கின்றது; நீங்களும் இரஞ்சிதத்தின் பெற்றுரும் புத்தி சொல்லி இரஞ்சிதத்தைப் பூரணமாகச் சம்மதிக்கச் செய்யலாமென நினைக்கிறேம்'' என்று விசாலாட்சி சொன்னள். 'நாங்களும் இயன்றவரையிற் சொல்லுகிறேம்; இராமச்சந்திரனும் ஒரு அருமையான பிள்ளை; இரஞ்சிதத்தில் அவனுக்கு விசுவாசமுண்டென்பதை நான் அறிவேன்...'' என்று அவர் சொல்ல, ''இரஞ்சிதத்திற்கும் இராமச்சந்திரனிடத்தில் அதிக விசுவாசமுண்டு'' என்று பதில் சொன்னன் விசுவநாதன்; ''அப்படியாயின், கடவுளருளால் இந்த விவாகம் இனிது நிறைவேறு''மென்ருர் இரஞ்சிதத்தின்மாமனர்; உடனே, அவர் இரஞ்சிதத்தை அந்த இடத்திற்கு வருவித்து விசுவநாதன் விசாலாட்சி யென்னு மிருவருடைய சமுகத்திலே அவளை நோக்கி ''மகளே, இவர்கள் ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பலநாளாயினவாம்; ஆனதனல் மீண்டுபோக விரும்புகிருர்கள்; எங்களைக் காட்டிலும் இவர்களே உனக்கு நெருங்கிய இனிய உறவினராவர்; இவர்கள் உனக்குச் செய்த உதவிபோன்ற உதவியை நாங்கள் சொந்தக்காரரென்றிருந்தும் செய்யக் கிடைக்கவில்லை. இவர்கள் எங்கள் வீட்டிற் சீவபரியந்தம் தங்கியிருந்தாலும் எங்களுக்கு ஆநந்தம் தான். ஆனல் அதற்கென்செய்யலாம் இவர்கள் உங்கள் மங்கலகருமத்தைப் பார்த்து மகிழ்ந்து போக விரும்புகிருர்களாம்' என்று இதமாகச் சொன்னர்; அவர் வார்த்தையின் இறுதி வாக்கியத்தைக் கேட்ட மாத்திரததே இரஞ்சிதம் நாணந் தலைப்படத் தன் காற் பெருவிரலைப் பார்த்தபடி யாதும் பேசாது சிறிது நேரம் நின்று, பின்னர் ''மாமா! எல்லாமறிந்த உங்களுக்கு ஏழை சொல்வதென்ன, தெய்வத்துக்கும உங்களெல்லாருக்கும் நான் ஒருவர்க்குத் தாரமாவது சம்மதமானல், நான் மறுத்து நிற்றல்முடியுமோ' என்று கலக்கத்துடன் சொன்னள்; ''எல்லாம் அவன் செயல்தானம்மா; கவலைப்பட வேண்டாம்'' என்று மாமன் சொல்லி அநுமதி கொடுக்க, விசாலாட்சி இரஞ்சிதமிருக்கும் அறைக்கு அவளைக் கூட்டிக் கொண்டு போய் அவளுடன்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

# மிஸ்ரர் சேனநாயக்காவின் பேச்சு

ஐயா,

சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த தங்களுடைய பத்திரிகையில் தங்கள் அரசியல் நிருபர் மிஸ்ரர் சேனநாயக்காவைப்பற்றி எழுதியவற்றைக் குறித்து எழும் ஆசங்கைகளுட் சிலவற்றைக் குறிக்கின்றேன்.

ஸ்ரீ சேனநாயகவின் பேச்சு செப்டெம்பர் மாதம் 7-ந் தேதி வெளிவந்த "ரைம்ஸ்" பத்திரிகையிலே காணப்படுகிறது; தங்கள் அரசியல் நிருபர் எடுத்துக் காட்டியவற்றுட் பெரும்பாலானவை அப்பத்திரிகையில் இல்லாதவை; "தமிழ் மக்களுக்கு அரசியல் ஞானமும் புகட்டத் தலைப்பட்டுவிட்டார்; இதனைச் செய்யவேண்டும்; இதனைச் செய்யவொண்ணாது என்று அவர் இலங்கையில் உள்ள அதிகார தோரணையில் ஆக்கினைகளும் விடுத்திருக்கிறார். தமிழ் மக்களாயுள்ளார் தமிழ்க் காங்கிரசிற் சேரக்கூடாது; அக்காங்கிரசில் உள்ளவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பவொண்ணாது ... இப்படியாக அனுப்பப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் இன்றியே மந்திரசபையை அமைத்துப் பரிபாலனத்தை நடத்துவேன் என்பதே சேனநாயக்காவின் பேச்சின் சாரம்' என்று தங்கள் அரசியல் நிருபர் எழுதுகிறார். "ரைம்ஸ்" பத்திரிகையில் வெளிவந்த அவருடைய பேச்சிலே இவ் வசனங்களுள் ஒன்றேனும் காணப்படவில்லை; இவ்வசனங்களின் பொருள் அவருடைய பேச்சின் சாரமாகவும் காணப்படவில்லை. இக்கருத்துக் கொண்ட வசனங்கள் வேறு பத்திரிகைகளில் உளவாயின், அவற்றைத் தங்கள் அரசியல் நிருபர் காட்டுக.

தமிழ் மக்கள் தெரிவுசெய்தனுப்பும் பிரதிநிதிகளுடன் ஒத்துழைத்துக் கருமம் ஆற்றவேண்டியது ஜனநாயக ஆட்சியை விரும்பும் அரசியல் வல்லுநர் கடமையாகும் என்பதை மிஸ்ரர் சேனநாயக்கா இதுவரை அறியாரா?" என்கிறார் தங்கள் அரசியல் நிருபர். ஜனநாயக ஆட்சியை விரும்பும அரசியல் வல்லுநர் எல்லாக் கட்சிகளோடும் ஒத்துழைக்க வேண்டுமென்பது எந்த நூலிலுள்ளதென்பதைத் தங்கள அரசியல் நிருபர் தெரிவிக்க. இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றத்திலே சாதாரண காலங்களிலே அரசுசெய் கட்சியும் அதற்கெதிரான கட்சியும் எப்போதும் இருக்கின்றனவே!

தமிழ்ப் பிரதிநிதிகளை மந்திர சபையிலிருந்து நீக்கித் தேசபரிபாலனத்திற் பங்கு பற்றாமற் செய்விப்பதற்கு சேனநாயக்காவுக்கு எவ்விதமான உரிமையும் யோக்கியதையும் இல்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்" என்கிறார் தங்கள் அரசியல் நிருபர். இப்படியான உரிமையும் யோக்கியமும் தமக்கு உண்டென்று மிஸ்ரர் சேனநாயக்கா சொல்லியிருந்தால், இக்கருத்துப் பொருந்திய வசனங்களைத் தங்கள் அரசியல் நிருபர் காட்டுக. மந்திரி சபையிலே தாமாயினும் தமது கட்சியாராயினும் சேருதல் நிச்சயமில்லையென்று சொல்லும் மிஸ்ரர் சேனநாயகா தமிழரை மந்திரி சபையிலிருந்து நீக்கும் உரிமை தமக்குண்டென்று சொல்லுதல் நூதனம். "எங்கள் கட்சி பாராளுமன்றத்திலே சிறுபான்மைக் கட்சியாய் விட்டால் நாங்கள் ஒற்றுமைப்பட்டவராய் எதிர்க்கட்சியாகி, அரசுசெய்கட்சி எங்கள் கொள்கைகளுக் கிசையும் சந்தர்ப்பங்களில் அதற்குத் துணையாகவும், இசையாவிடத்து மாறாயும் நிற்போம்" என்று ஸ்ரீ சேனநாயகா சொல்லுமிடத்துத் தமக்கு மந்திரிப் பதவி கிடையாமற்போதலுங் கூடும் என்பதைக் காட்டுகின்றாரல்லவா?

"மிஸ்ரர் சேனநாயக்கா .... தன் சர்வாதிகாரக் கிறுக்கைக் காட்ட முன்வந்தமை" என்கிறார் தங்கள் அரசியல் நிருபர். அவருடைய இந்தப் பேச்சிலே எந்தப் பாகத்திலே 'கிறுக்கை' காட்டுகிறார் என்பதைத் தங்கள் நிருபர் காட்டுக.

இனி, 'அதிகார வெறியில் ஆத்திரப்படுகிறார், அது அரசியல் ஞான சூனியத்தின் அறிகுறி" என்னும் தலைப்புக்களுக்கும் தங்கள் அரசியல் நிருபர் ஆதாரங் காட்டுக.

இங்ஙனம்
சு. சிவபாதசுந்தரம்

கந்தவனம்
விய ஹு புரட்டாதி மீ ௧௰

---

## ஒரு புதிய வழக்கறிஞர்

முதலியார் சி. ஆறுமுகமவர்கள் இருபது வருடகாலம் திறமையோடு அரசாங்க உத்தியோகம் வகித்தபின், அரச சேவையை விடுத்துத் தாம் வழக்கறிஞராக வரவிரும்பிப் பிறக்ரர் பரீட்சையில் திறமையுடன் சித்தியெய்தி, சில தினங்கட்குமுன் நீதியரசர் திரு. C. நாகலிங்கமவர்கள் முன்னிலையில் தாம் பிறக்ரர் என்ற முறையில், அதிகார சத்தியஞ் செய்துள்ளாரென அறிந்து மகிழ்ச்சியடைகின்றேம். இவர் சத்தியஞ் செய்தசமயத்தில், மேற்படி நீதியரசர் அவரை ஆசீர்வதித்துப் பின் வருமாறு கூறினர்:

'நீர் வழக்கறிஞராய் வந்திருப்பது எனக்குச் சந்தோஷம்; இத்துறையில் நீர் விருத்தியடைய வேண்டுமென்பதே என் விருப்பம்; நாம் நியாயவாதியாகக் கடமை பார்த்த காலத்தில் நீர் டிஸ்திறிக் நீதிதலத்திற் பிரதம காரியதரிசியாகக் கடமைபார்த்ததையும், "சுப்பிறீம்" நீதிமன்றத்தில் நீர் தமிழ்முதலியாராகக் கடமை பார்த்ததையும், இலங்கைத் தேசாதிபதியவர்களின் தமிழ் முதலியாராக நீர் உத்தியோகம் வகித்திருந்தமையையும், இப்படி 20 வருட காலம் வரை நீர் திறமையோடும் விசுவாசத்தோடும் கடமையாற்றிவந்ததை நாம் அறிவோம்; மேலே சொல்லப்பட்ட துறைகளில் நீர் நீடித்தகாலம்கடமையாற்றியமையினுல், அந்த நீடித்த அநுபவத்தையும் அறிவையும் ஆதாரமாகக் கொண்டு, இப்பொழுது நீர் கைக்கொண்டுள்ளதாகிய நியாயத்துறையிலும் பூரண அநுகூலம் செல்வம் செல்வாக்கு என்னுமிவைகளைப் பெறுவீரென நீதியரசரென்ற முறையில் நாம்உம்மைவாழ்த்துகின்றோம்."

முதலியார் ஆறுமுகமவர்கள் வடமராட்சியைச் சேர்ந்த கரவையம்பதியைச் சன்மவூராகக் கொண்டவர் நன்மரபிலே பிறந்தவர்; இவர் அரச சேவைகள் வகித்திருந்த காலத்திலே அரசினர் ஊரவர்களென்னும் இருதிறத்தினர்க்கும் இதமாகவும் விசுவாசமாகவும் கடமைபார்த்து வந்தவரென்பது ஊரறிந்த விஷயம்; சுவாதீனத்துடன் தேசத்தொண்டு செய்ய வேண்டுமென்ற நோக்கம்பற்றியே நியாயவாதத் தொழிலை இவர் மேற்கொண்டாரென அறியலானேம்

---

## ஸ்ரீமான் கனகரத்தினம்

இலங்கையரசாங்கத்தின் கணக்குப் பரிசோதனைப் பிரதம அதிகாரியாக கடமையாற்றி இப்போது இளைப்பாறியுள்ள ஸ்ரீ க. கனகரத்தினம் அவர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியின் ஓர் அபேட்சகராக அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் நிற்பர் என்று அறிகிறோம்.

## நீர்வேலியில் நெசவுத் தொழிற் சாலை

ஐயா,

16-8-46-ல் வெளிவந்த தங்கள் பத்திரிகையில் "நீர்வேலியில் நெசவுத் தொழில்" என்னும் தலையங்கத்துடன் நீர்வேலிவாசி என்ற புனைபெயருடன் நீர்வேலி வடக்கில் இருந்து எழுதியதாக ஓர் கடிதம் பிரசுரமாகியுள்ளது. நான் மேற்படி மாணவ ஐக்கியசங்கத்தில் ஓர் அங்கத்தவன். நெசவு நிலையத்துக்குப் பக்கத்தில் வசிப்பவன். நெசவு நிலயம் ஸ்தாபிப்பதற்கு கைத்தொழிற் பகுதியார் இடந்தேடி அலைந்தபோது ஊரிலுள்ள பெரியோர்களின் வற்புறுத்துதலின் மீது திரு. அத்தியார் அருணசலம் தனது பாடசாலையின் ஓர் பகுதிக் கட்டடத்தைக் கொடுத்துதவினரேயல்லாமல் அவராகுதல் அல்லது அவரது ஆசிரியர்களாகுதல் நெசவு நிலயம் ஆரம்பிக்கும் நோக்கமாக நானறிந்தவரையில் முயற்சி செய்தவர்களல்லர். திரு. அத்தியார் அருணசலம் நெசவு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கொழும்பில் வசித்தார், அவருடைய ஆசிரியர்கள் நெசவு நிலயத்துக்காகப் பாடுபட்டார்கள் என்பது முழுப் புழுகு. தங்களுக்குச் சாரசரி இல்லையென்று நெசவு பழகப் போன மாணவ மாணவிகளைத் தடுத்த ஆசிரியர்களா நெசவுத் தொழிலுக்குப் பாடுபட்டார்கள்? ஒருவர் தனது வீட்டை வியாபாரத் தொழிலுக்கு என ஒருவருக்குக் கொடுத்துவிட்டால் வீடு கொடுத்தவர் தன்னுடைய கணக்கில்தான் வியாபாரம் நடைபெறுகிறதென்று சொல்வது பொருந்துமா?

இப்போது மேற்படி நெசவு நிலயத்துக்கு திரு. அத்தியார் அருணசலம் அவர்கள் தனது மனைவியின் பெயரை வைக்காததினுலும் மாணவ ஐக்கிய சங்க மாக்கியதினுலும் மனநிம்மதியற்றவராய் இங்கிலைய நீர்வாகத்துக்கு மாறாகக் கொழும்புக்கு ஓடித் திரிகிறார். இவரது ஆசிரியர்கள் நெசவு பழகும் பிள்ளைகளைத் தடுப்பதற்காக இராப்பகலாகப் பெற்றோர்களிடம் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மாணவ ஐக்கியசங்க மாக்குவதற்குக் காரணராய் இருந்த நெசவு ஆசிரியரை நீக்குவதற்குக் குட்டிக்கரணம் போடுகிறார்கள். இவர்கள்தானு நெசவு நிலயத்தைப் படைத்தார்கள்! காத்தார்கள்? இப்பொழுது நெசவு பழகும் பிள்ளைகள்-பெற்றோர்கள்-கமத்தொழிற்சங்கம். ஊரவர்கள், நெசவு ஆசிரியர்ஓர்கட்சி. ஸ்ரீ அத்தியார் அருணசலமும் அவரின் கீழ் உள்ள ஆசிரியர் சிலரும் ஒரு கட்சி. ஜனநாயக முறைப்படி இப்பொழுது ஊரவர்கள் கையில் உள்ள பொதுஸ்தாபனம் 'நெசவுசங்கம்' ஒன்றேயாகும். ஆகையால் ஊரவர்கள் இனிமேலும் ஏமாறமாட்டார்கள். 18 பிள்ளைகளில் இருந்து குறைந்ததற்கு திரு. அத்தியாரது ஆசிரியர்களின் எதிர்ப் பிரசாரம் தான் காரணம்.

தங்கள் 'நிருபர்'மீது அதிக குறைகள் கூறப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் உண்மையை மறைப்பதற்குச் செய்த வழிகளாகும் நிருபர் தாம் வந்த விஷயத்தை விட்டுவிட்டு உபாத்தியாரைத் தேடி அவர்களுடைய சுகதுக்கங்களை விசாரிக்கவில்லையென்றும் அவர்களுடைய நாமங்களை யெல்லாம் பிரசுரிக்கவில்லையென்றும்தான் மனக்கொதிப்பேற்பட்டது. விரும்பினுல் தினசரிப் பத்திரிகைகளில் தங்கள் பெயர்களையும் ஜீவிய சரித்திரத்தையும் விளம்பரம் செய்யலாமல்லவா? திருவிழாபார்க்கப்போனுல் திருவிளாவுக்கு வந்தவர்களை யெல்லாம் விசாரிக்க வேண்டுமா? உபயகாரன் யார்? அவருக்குப் பிள்ளை குட்டிகள் உண்டா? சடலை வீற்க வந்தவர்கள் எத்தனைபேர்? இவர்கள் உபயகாரனுக்கு உரித்தானவர்களா? கோயிலில் குளம் கிணறு பார்க்க வேண்டுமா? தவளைகளை சுகதுக்கம் விசாரிக்க வேண்டுமா? இவைகளை எல்லாம் பதிந்துவிட் டாரிடம் வந்து விபரமாகக் கூறவேண்டும்?

திரு. குமாரசுவாமி தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவை குழப்புவதற்கு ஆசிரியர்கள் பட்ட பாட்டை மறைக்க முடியுமா? எப்படியோ தங்கள் பாடசாலை கேவல நிலையில் வர, நெசவு நிலயத்தில் பரிசளிப்பு விழா நடைபெறுவதை ஆசிரியர்கள் சகிப்பதெப்படி? ஊரிலுள்ள பெரியோர்களது தலையீட்டினுல் பரிசளிப்பு விழாவை நன்கு நடத்தமுடிந்தது. கடிதருடைய கூற்றுப்படி கடைசிப் பந்தியில் "மேலும் நெசவுத் தொழில் மாணவ ஐக்கியசங்கம் ஸ்தாபிக்கப்பட்டதென தங்கள் நிருபர் கூறுகிறார்" என்று எழுதுகிறார். இதன்படி கடிதர் மாணவ ஐக்கியசங்கமாக்கப்படவில்லை யென்று மறுக்கிறார், கடைசியில் எழுதியதைக் கவனிக்கவும். "ஏதோ சில ஊனல்களின் பயனுக இச் சங்கத்தலைவர் கடந்த இரு கூட்டங்களில் பங்குபற்றவில்லையென்றும் இனிப் பங்குபற்ற உத்தேசிக்கவில்லையென்றும் வதந்திகள் உலாவுகின்றன" என்று இருக்கிறது. இதிலிருந்து மாணவ ஐக்கியசங்கம் ஒன்று இருக்கிறதென ஒப்புக்கொள்கிறார். சங்கம் இல்லாமல் தலைவர் வருவதெப்படி? முன்னுக்குப்பின் முரண்பட்ட இவ்வசனங்கள் படிப்புள்ள தன்மையைக் காட்டுகின்றனவா? இவைகள் எல்லாம் கூலிக்கு மாரடித்தமாதிரி இல்லையா? கடிதர் மேடி சங்கம் பதிவு செய்யப்படவில்லை யென்றும் கூறுகிறார். ஆனுல் சங்கம் பதிவு செய்யப்பட்டிருக்கிறதுஎன்பதை இனியாவது அறிவாராக. பதிவு இலக்கம் T. T. C./ 1125 திகதி 27-7-46.

இங்ஙனம்,
க திருநாவுக்கரசு,

நீர்வேலி வடக்கு,
25-8-46

---

## ராஜாஜியின் மோட்டார் ரதத்துக்குச் சூட்டார்

இந்திய இடைக்கால அரசாங்கத்திலே மந்திரியாயுள்ள ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார் அவர்களை அவருடைய இல்லத்தில் விடுத்து, அவருடைய கார் திரும்பிச் சென்றபோது யாரோ அதனை நோக்கிச் சுட்டனர் என்று தெரிகிறது. சாரதிமாத்திரமே காரில் இருந்தார். அவர்க்கு எவ்விதமானகாயமும் ஏற்படவில்லை. பொலிசார் விசாரணைபுரிகின்றனர்.

---

## தேகவியோகம்

காரைநகர் ஸ்ரீ இராமலிங்கம் உடையார் அவர்களின் சிரேஷ்டபுத்திரன் வேலுப்பிள்ளை உடையார் அவர்கள், எதிர்பாராத விதமாகச் சென்ற வெள்ளிக்கிழமை (13-9-46) பிற்பகல் 3 மணியளவில் சிவபத மடைந்தாரென்ற சமாசாரத்தை அறியலானேம். இவர் இறக்கும் பொழுதுவயது55 இவர்உடையாராகவும், விவாகப்பதிவு காரியஸ்தராகவும் திருப்திகரமாகக் கடமை பார்த்து வந்ததுடன் கருங்காலி முருகமூர்த்தி கோயிலென வழங்கும் சுப்பிரமணிய தலத்தின் தர்மகர்த்தாவாக இருந்து திருப்பணிகளையும் நல்ல முறையில் அமைத்துள்ளார்.

இவரது மரணத்தால் வருந்தும் சகோதரர் நாகலிங்கம்அவர்களுடனும், சிரேஷ்ட புத்திரர் கந்தசாமி அவர்களுடனும் ஏனைய சுற்றமித்திரர்களுடனும் நாமும் அநுதாபப்படுகின்றோம்.

### தானவரவு

மேடி மரணக்கிரியையின் போது சைவ பரிபாலனசபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றோம்.

—மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழ்

1ம் பக்கத் தொடர்ச்சி

லைத் தருவது தமிழ். துக்கம் வந்த போதெல்லாம் மனதிற்கு ஆறுதல் தரக்கூடிய அயர்வில்லாத அறிவைக் கொடுக்கத்தக்க இலக்கியமுள்ளது தமிழ்.

அன்பென்ற அதைமிக்க
அறிவிக்க நின்று
துன்பங்கள் தாங்கின்ற
துயரத்தை வென்று
இன்பத்தின் நிலைசொல்ல
இணையற்ற வழியாம்
தெம்புள்ள தமிழென்று
திகழ்கின்ற மொழியாய்.

மனிதனுக்கு மனிதன் செய்யும் துன்பங்களுக்கும் அவற்றால் நேரும் துயரங்களுக்கும் காரணம் 'அன்பு' என்பது இல்லாமைதான். அந்த அன்பைப் போதிப்பதே அலுவலாகக் கொண்டது தமிழ். அன்பை அறிவித்து உண்மையான இன்பம் எங்கே இருக்கிறது என்று காட்டக்கூடிய தெம்புகள் நிறைந்த கருத்துகள் அடங்கிய புகழ் கொண்டது தமிழ்.

அருளென்று உலகத்தின்
அறிவாள ரெல்லாம்
பொருள்கொள்ளும் பொருள் [தன்னை
புரிவிக்கும் சொல்லாம்
இருள்கொண்ட உள்ளத்தில்
இயல்பான பழியைத்
தெருள்கொள்ள ஒளிதந்து
திகழ்கின்ற மொழியே.

உலகத்தில் மிகச் சிறந்த அறிவாளிகள் எல்லாரும் 'அருள்' என்று எதைச் சொல்லுகிறார்களோ, அந்த அருளை விளங்கவைப்பது தமிழ். இயற்கையாகவே அறியாமை என்ற இருள்நிறைந்த மனத்தில், அந்த இருளைப் போக்கி ஞான ஒளியுண்டாக்கக் கூடிய ஜோதியாகப் பிரகாசிப்பது தமிழ்.

அறிவென்று பெயர்கொண்ட
அதைமட்டும் நாடும்
குறிகொண்டு உலகெங்கும்
குறைவின்றித் தேடும்
வெறிகொண்ட இனமென்று
வெகுபேர்கள் போற்றும
நெறிகொண்ட தமிழ்மக்கள்
நிறைகண்ட மாற்றம்

அறிவு என்கிற ஒன்றைமட்டும் சேகரிக்கும் நோக்கத்தோடு உலகத்தில் பல பாகங்களிலும் அலைந்துதிரிந்து தேடக்கூடிய வெறிபிடித்த இனத்தவர் என்று அநேக ஆராய்ச்சிககாரர்கள் மெச்சுகின்ற கொள்கையுள்ள பண்டைய தமிழ் மக்களின் பெருமையை நிறுத்துக்காட்டுகின்ற தராசாகும் தமிழ்,

கலையென்ற கடலுக்குக்
கரைகண்ட புணையாம்
நிலைகொண்ட அறிவுக்கு
நிகரற்ற துணையாம்
அலைபட்ட மனதிற்கு
அமைதிக்கு வழியாம்
மலையுச்சி ஒளியன்ன
மறைவற்ற மொழியாம்.

சிலை செதுக்குதல், சிற்பம், சித்திரம் சங்கீதம், நடனம், நாடகம், கவிதை கருவிகளில் இசைத்தல் முதலிய எல்லாக் கலைகளிலும் இன்றளவும் இணையற்றசிறப்புடையவர்கள் தமிழர்களேயாதலால் 'கலை' என்ற கடலுக்குக் கரைகண்ட கப்பல் தமிழாகும், கலையறிவுகளுக்கு மேல் நிலையறிவான ஆன்ம ஞானத்துக்கும் நிகரில்லாத துணையாவது தமிழ். இரவில் புயலில் அகப்பட்டுத் திசை தடுமாறி சமுத்திரத்தில் தத்தளிக்கின்ற கப்பலுக்கு, மலை விளக்கானது வழிகாட்டி நிம்மதியளிப்பதைப்போல ஆசாபாசங்களில் அலைப்பட்டுத் தவிக்கின்ற மனதிற்குச் சாந்தியைத்தரவல்லதுதமிழ்.

அறமன்றிச் செயலொன்றும்
அறியாத மொழியாம்
மறமென்ற செயல்என்றும்
மதியாத மொழியாம்
நிறமென்று மதமென்று
நிந்தித்தல் அறியாத்
திறமுள்ள தமிழென்று
திசைமெச்சும் நெறியாம்

தர்மத்தோடு சேராத எந்தக் காரியத்தையும் தமிழ்இலக்கியம் பேசாது. பாபத்தோடு சம்பந்தமுள்ள எதையும் பாராட்டாது. நிற வேற்றுமைக்காகவோ மத வேற்றுமைக்காகவோ எவரையும் நிந்தனை பேசுவதை அறியாத பெருந்தன்மையுள்ளது என்று மற்றத் தேசத்தாரெல்லாம் மெச்சுகின்ற சன்மார்க்கம் மிக்கது தமிழ்.

குணமென்ற அதைமட்டும்
குமபிட்டு நாளும்
பணமென்ற பலமென்ற
பயமின்றி வாழும்
இணையற்ற உறுதிக்கு
இசைமிக்க வழியாம்
மணமிக்க தமிழென்ற
மதிமிக்க மொழியாம்.

குணம் உள்ளவர்களைமட்டும் வணங்கி, பணமுள்ளவன் என்பதற்காகவோ பலமுள்ளவன் என்பதற்காகவோ எவருக்கும் பயப்படாமல வாழக்கூடிய ஒப்பற்ற தைரியத்தை உண்டாக்கத் தந்ததும் அந்தத் தைரியத்தை நியாய புத்தியோடு நிறைவேற்றும் நிதானத்தையும் புகட்டவல்லது தமிழ்.

பலகாலம் பலநாடும்
பரிவோடு சுற்றி
உலகோரின் பலசொல்லை
உறவோடு கற்று
விலகாத நட்பிற்கு
வெகுகெட்டி வேராம்
தலையாய அறிவிற்குத்
தமிழென்று பேராம்.

தமிழ்மொழியானது ஒரே நாளில் திடீரென்றுதோன்றி வளர்ந்துவிட்டதல்ல. அநேக நூற்றாண்டுகளாக அநேக நாடுகளில் ஆர்வத்தோடு அலைந்து பல அந்நிய பாஷைகளையும் சொந்த மொழியைப்போலப் படித்து அவற்றில் கருத்து வேற்றுமை காணுதலால் எல்லாத் தேசத்தவரோடும் ஸ்திரமான நட்பு கொண்டாடவேண்டும் என்ற சமரச சன்மார்க்கம்நிறைந்த அறிவிற்குத்தான் தமிழ் என்று பெயர்.

எந்தெந்த நாட்டின்கண்
எதுநல்ல தென்று
அந்தந்த மொழிதந்த
அறிவின்கண் நின்று
முந்துள்ள இவையென்ற
முறையுள்ள எல்லாம்
தந்துள்ள தொகைபோலும்
தமிழென்ற சொல்லாம்.

அப்படிப் பலகாலம் பல நாட்டின் பரிவோடு சுற்றி எந்தெந்தமொழியில் எது சிறந்த அறிவு என்று கண்டறிய அந்தந்த மொழிகளையெல்லாம் ஆராய்ந்து, அவற்றிலுள்ள உயர்ந்த கருத்துக்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்த தொகைபோன்றதுநம்முடைய தமிழ்!

விரிகின்ற அறிவோடு
விரிகின்ற நிலையால்
திரிகின்ற உலகத்தைத்
தெரிகின்ற கலையால்
சரியென்ப தொன்றன்றிப்
பிறிதொன்றிற் சலியா
பெருமைத்து தமிழென்ற
பெயர்தந்த ஒலியாம்

நாளுக்குநாள் விரிகின்ற அறிவோடு தானும் விரிந்துகொடுக்கின்ற தன்மையினாலும், பழையன கழிந்து புதியன புகுந்து அப்போதுக்கப்போது மாறுகின்ற உலகப் போக்கை அறிந்துகொள்ளும் சாமர்த்தியத்தாலும் 'எந்தெந்தக் காலத்துக்கு எது சரி' என்று பார்த்துக்கொள்வதைத் தவிர, 'இது இப்படியே இருக்க வேண்டும்' அது அப்படியே இருக்க வேண்டும் என்ற சலிப்புகள் பேசாத பெருமையுள்ளது தமிழ்.

சீலத்தை இதுவென்று
தெரிவிக்கும் நூலாம்
காலத்தைத் தூரத்தை
கருதாது மேலாம்
ஞாலத்தை அண்டத்தை
நாமாக எண்ணும்
மூலத்தின் உணர்வெங்கள்
மொழிஉண்டு பண்ணும்

தமிழ் என்பது, உயர்ந்த ஒழுக்கம் இன்னதென்று தெரிவிக்கின்ற சாஸ்திரமாகும். காலம் தூரம் முதலியவற்றைக் கடந்து இந்த உலகமும் இதைப்போல் எண்ணிறந்த உலகங்களடங்கிய இந்த அண்டமும் எல்லாம் நாமே என்று 'காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையுமெங்கள் கூட்டம், நோக்கும் திசையெல்லாம் நாமின்றி வேறில்லை; நோக்க நோக்கக் களியாட்டம்' என்று பாரதியார்பாடியபடி மூலப்பொருளோடு நம்மைச் சேர்த்து எண்ணக்கூடிய உணர்வை நமது தமிழ் உண்டுபண்ணும்.

பிறநாடு பிறர்சொத்து
பிறர்சொந்தம் எதையும்
உறநாடிச் சதிசெய்தல்
உன்னாத மதியும்
இரவாமல் எவருக்கும்
ஈகின்ற நயனும்
அறமோதும் தமிழ்கற்று
அடைகின்ற பயனும்

பிறருடைய தேசத்தையோ பிறருடைய சொத்தையோ அல்லது பிறருக்குச் சொந்தமான வேறு எதையோ அபகரித்துக்கொள்ளும் ஆசை கொண்டு மோசடி செய்யும் சூழ்ச்சிகளை நினைக்காத அறிவும், தானம் வாங்குவது பாபமென்றும், தானம் கொடுப்பதே தர்மமென்றும், எண்ணுகின்ற உயர்குணமும் தமிழால் அடையும் பயன்களாகும்.

விஞ்ஞானம் அதனோடு
விளையாடி நிற்கும்
மெய்ஞ்ஞானம் அதைமட்டும்
மிகநாடிக் கற்கும்
பொய்ஞானம் வாதித்துப்
புனிதத்தை இகழும்
அஞ்ஞானம் இல்லாமை
அதுபெற்ற புகழாம்.

நவீனவாழ்க்கைக்கான விஞ்ஞான அறிவுகள் தமிழில் இல்லையே என்ற கேள்வி பிறக்கலாம். தமிழ், விஞ்ஞான அறிவுகளை இகழ்வதில்லை. ஆனால் விஞ்ஞானத்தை அது ஒரு விளையாட்டுப் பொருளாகத்தான் மதிக்கிறது,

சாசுவதமான சத்தியஞானத்தைத்தான் தமிழ் மிகவும் கருத்தோடு தேடிப் படிக்கும் கேட்பதற்கு நியாயம்போலத் தோன்றுகிற அசத்திய தர்க்கங்களைப் பரிசுத்தமான நோக்கங்களையும் பரிசுத்தமுள்ள பெரியவர்களையும் இகழ்ந்து பேசுகிற மடமையில்லாததே தமிழில் தனிச் சிறப்பாகும்.

கொல்லாமை பொய்யாமை
எனுமிவ் விரண்டில்
எல்லாநல் அறமுற்றும்
இடைநிற்றல் கண்டு
சொல்லாலும் செயலாலும்
மனதாலும் தொழுதோர்
நல்லோர்கள் பணிதந்த
தமிழ் வாழ்க நாளும்.

ஜீவகாருண்யம் பொய் சொல்லாமை என்ற இரண்டு ஜீவதர்மங்களுக்குள் மற்ற எல்லா தர்மங்களும் அடங்கிவிடுவதை அறிந்து அதன்படியே திரிகரண சுத்தியோடு வாழ்ந்துவந்த எத்தனையோ நல்லவர்கள் நெடுங்காலமாகச் செய்துள்ள சேவைகளெல்லாம் சேர்ந்து வளர்ந்தது தமிழ்.

தமிழ் வாழ்க!

—வானொலி.


## விளம்பரம்

மூளாயிலிருக்கும் க. க. செல்லையா ஆசாரி ஆகிய என்னிடத்தில் தற்கால நாகரீக முறைப்படி செய்த 3 அடி உயரம் உள்ள மயில்வாகனம் ஒன்று பூரணமாயிருக்கிறது தேவையானவர்கள் கடித மூலமும் நேரிலும் தெரிவித்து வாங்கிக் கொள்ளலாம்.

எனது விலாசம்:

க. க. செல்லையா,
மூளாய்,
சுளிபுரம் போஸ்ற்

Mis 134 20, 24


## பிராமண சமாஜம்

### இரண்டாம் வருடாந்தக் கூட்டம்

பிராமண சமாஜத்து மகாசபையின் இரண்டாம் வருடாந்தக் கூட்டம், யாழ்ப்பாணம் வண் நாவலர்வித்தியாசாலை மண்டபத்தில், சமாஜத் தலைவர் முகாந்திரம் பிரமஸ்ரீ யா. தி. சதாசிவஐயர் அவர்கள் தலைமையில் வியவருஷம் ஆடிமீ 19ந் திகதி (3-8-46) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு அன்று பூர்த்தி பெறாமல், நிகழும் ஆவணிமாசம் 2 ந் திகதி (7-9-46) சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு அதே மண்டபத்தில் அதே தலைமையில் மீட்டும் கூட்டப்பட்டு நடைபெற்றது. அநுபந்தமான கூட்டத்தில் அறுபதுக்கு அதிகமான அங்கத்தவர் சமுகமாயிருந்தனர்.

முதற் கூட்டமும் பூர்த்திக் கூட்டமும் சமாஜப் பாடசாலை மாணவர் சிலர் சேர்ந்து இன்னிசையுடன் செய்த கடவுள் வணக்கத்தோடு ஆரம்பமாயின. தலைவர் அவர்கள் ஆரம்ப உரையாகச் சில அரிய குறிப்புக்களைக்கூறினர். பின்பு சமாஜத்து வேதாத்தியயன வகுப்பு மாணவரிற சிலர் ஏகோபித்து உருத்திரத்தில் ஒரு அநுவாகத்தைச் சுவர பேத விளக்கத்துடன் அழகாகஓதினர். மேலும் சம்ஸ்கிருத பாடசாலை மாணவர் சிலர் சேர்ந்து சில தோத்திரப் பாக்களை இன்னிசையுடன் பாடினார்கள். "ஆச்சிரமவர்ணமே" என்ற பொருள்பற்றியும், "காளிதாச கவித்துவம்" என்ற பொருள்பற்றியும் இரு மாணவர் அழகாகவும் விளக்கமாகவும் தனித்தனி பேசினா.

"வேதாத்தியயனத்தின்அவசியம்" என்ற பொருள்பற்றி சமாஜ அத்தியயனவகுப்பாசிரியர் வேதாந்த சிரோன்மணி பிரமஸ்ரீ K V. இராமசர்மா அவர்கள் நல்ல விளக்கமாகப் பேசினார்கள். அதன் பின் தேவபாஷா மகத்துவம் என்ற பொருள்பற்றி வியாகரண மகோபாத்தியாயர் பிரமஸ்ரீ V. இராமசாமிசர்மா அவர்கள் பல எதுகைகள் எடுத்துக் காட்டுகளுடன் அழகாகப் பேசினார்கள். அவ்வளவுடன் அன்றைய கூட்டம் நிறுத்தப்பட்டு, முன் குறிப்பிட்டவாறு தொடர்ந்து நடைபெறுவதாயிற்று.

முதலாம் வருடாந்தக் கூட்ட வரலாறு இரண்டாம் வருட ஆவேதனம் என்பன காரிய தரிசகராலும், இரண்டாம் வருடக் கணக்கறிக்கை தனாதிகாரியாலும் வாசிக்கப்பட்டன அப்பால் 3ம் வருடக் காரிய நிர்வாகஸ்தர் தெரிவு நடைபெற்றது

தலைவர்: முகாந்திரம்

பிரமஸ்ரீ யா. தி. சதாசிவ ஐயர்

உபதலைவர் ஐவர்:

பிரமஸ்ரீ சா. குமாரசாமிக்குருக்கள்
,, சி. சோமசுந்தர ஐயர்
,, நா. சாமிநாதக்குருக்கள்
,, ச, சோமசுந்தரஐயர்
,, கா. சி. மஹேசசர்மா

காரியதரிசகர்:

பிரமஸ்ரீ தி. ச. தியாகராஜஐயர்

உபகாரியதரிசகர்:

பிரமஸ்ரீ ந. கந்தசாமி ஐயர்

தனாதிகாரி:

பிரமஸ்ரீ இ. சி. இரகுநாதஐயர்

கணக்குப் பரிசோதகர்:

பிரமஸ்ரீ ம. இராமலிங்கஐயர்

தலைவர் அவர்கள் முடிவுரையாகச் சில கூறினர். பிரமஸ்ரீ காசி மஹேசசர்மா அவர்கள் நன்றிகூறக் கடவுள் வணக்கத்துடன் மாலை 5½ மணியளவில் கூட்டம் பூர்த்தியாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி மந்திரியின் பாராட்டு

"யாழ்ப்பாணத்தவர்கள் நற் கருமமென்றால் உடனே ஏற்றுக் கொள்வர்……" —கல்விமந்திரி.

சென்றவாரம் இலங்கை அரசாங்கசபைக் கூட்டத்தில் இலவசக் கல்வி சம்பந்தமாகப் பேசும்போது, கல்விப்பகுதி மந்திரியாகிய மிஸ்ரர் கன்னங்கரா பின்வரும் பாராட்டுரையையும் பகர்ந்தனர்:

"இப்பொழுது இலவசக்கல்வி பயிற்றுமிடங்களாக இலங்கையில் 175 பள்ளிக்கூடங்கள் உள்ளன; அவற்றுள் யாழ்ப்பாணப் பிரிவில் மாத்திரம் 82 வித்தியாசாலைகளும், இலங்கையின் ஏனையபாகம் முழுவதிலும் 93 வித்தியாசாலைகளுமுள்ளன, இலவசக் கல்விமுறையிற் சேராமல், மாணாக்கரிடம் வேதனம் பெற்றுக் கல்வி பயிற்றும் வித்தியாசாலைகள் 119 இன்னமும் இலங்கையிலுள்ளன; ஆனால், இப்படியான பள்ளிக்கூடம் 2மாத்திரம் யாழ்ப்பாணப் பெரும் பிரிவிற் காணப்படுகின்றன; இதனால் யாழ்ப்பாணத்து மக்கள் நன்மைக்காகிய எந்த விஷயத்தையும் உடனே ஏற்றுக்கொள்பவர்களென்பதும், ஏனையோர் அப்படிப்பட்டவர்களல்ல ரென்பதும் உணரக்கிடக்கின்றன."

## யாழ்ப்பாணப் புகைரத ஸ்தானம்

யாழ்ப்பாணப் புகைரத ஸ்தானத்திலே, இப்போது பிரயாணிகள் ஏறவும், இறங்கவுமாக ஒரேயொரு "பிளாட்பாரம்" என்னும் மேடையேயுண்டு இது போதாது. மற்றப் பிரதான புகைரதஸ்தானங்களிலிருப்பதுபோல இரு 'பிளாட்பாரங்களை" அமைக்கவேண்டுமென்றும், இந்தப் புகைரத ஸ்தானத்தை நவநாகரீக வசதிகளோடும் கூடியதாக்க வேண்டும் என்றும் புகைரதத் தலைவரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றைச் சென்ற 13-9-46 ல் நிகழ்ந்த யாழ்ப்பாணம் நகரசபைக் கூட்டத்தில் ஸ்ரீ R. C. மன்மதராயன் எடுத்தாண்டார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

### இந்தியாவில் இருந்து மிளகு

இலங்கைக்கு 80 தொன் மிளகு ஏற்றுமதி செய்ய, இந்திய வர்த்தகர்க்கு இந்திய அரசாங்கம் அநுமதியளித்துவிட்டது.

## ஜின்னு - வேவல் சந்திப்பு

### நம்பிக்கையுண்டு

சென்ற திங்கட்கிழமை ஜின்னு, இராஜப்பிரதிநிதி வேவலைக் கண்டு சம்பாஷித்தார் ஒன்றரை மணித்தியாலம்வரை சம்பாஷணை நடந்ததாயினும். ஓர் முற்றும் ஏற்படவில்லை. சென்ற புதன்கிழமை சம்பாஷணை மீண்டும் தொடர்ந்து நடைபெறலாம் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இவ்விஷயமான ஓர் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை.

சென்ற திங்கட்கிழமை நடந்த சம்பாஷணைகளின் விளைவாக அரசியல் வட்டாரங்களில் நம்பிக்கை நிலவுகின்றது ஜின்னு தாம் இதுகாறும் கொண்டிருந்த பிடிவாதத்தை விடுத்து இடைக்கால தேசிய அரசாங்கததிற பங்குபற்றவும், நீண்டகால அமைப்பிற் பங்குபற்றவும், உற்பாதங்கள் தோன்றுகின்றன என்று விஷயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

## அபேட்சகர்க்கு அடையாளங்கள்

இனி நடக்கவிருக்கும் கொழும்பு நகரசபைத் தெரிவில் வர்ணப் பெட்டி முறையைத் தவிர்த்து ஒவ்வோர் அபேட்சகர்க்கும் ஓர் அடையாளத்தைக் கொடுக்க அரசாங்கம்நிச்சயித்திருக்கிறது. குருவி, குடை, யானை, கார், மரம், தராசு, திறப்பு, துவிச்சக்கரவண்டி, வண்டிச்சில்லு நாற்காலி, குதிரை என்பனவே சிலஅபேட்சகர்களின் அடையாளங்களாக விதிக்கப்பட்டிருக்கிறது.

## துணி வாங்க அரிசிக் கூப்பன் புத்தகம்

துணி வாங்கவேண்டுமானால், துணிக் கூப்பன்களுடன், அரிசிக் கூப்பன் புத்தகத்தையும் கொண்டுவர வேண்டுமெனத் துணி வியாபாரிகள் இப்போது வற்புறுத்துவதாகத் தெரிகிறது. இவ்விதம் செய்வதற்குப் பிரமாணம் இருக்கிறதாம்.

## டக்ரரின் தற்கொலை

றிடிகமத்திலே பிரதி வைத்திய அதிகாரியாகக் கடமைபார்த்த டக்ரர் W. J. டீ. மெல் என்பவர், தம்மை வேறு ஸ்தானங்களுக்கு மாற்றும்படி மேலதிகாரிகளுக்குப் பலமுறை எழுதியும், அவர்க்குத் திருப்திகாமான பதில் கிடைக்காததால் சென்றசெவ்வாய்க்கிழமைதற்கொலை செய்திறந்தார் என்று ஓர் செய்தி கூறுகிறது.


## வட்டுக்கோட்டைப் பகுதிப் பிரதிநிதி

அடுத்துவரும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் வட்டுக்கோட்டைப் பகுதியெனப்படும் வலிகாமம் மேற்குப் பிரிவுப் பிரதிநிதியாக அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டின் சார்பில், அம்மகாநாட்டின் அநுமதிக்கிணங்க, பிரதிநிதியாக வருதற்கு அபேட்சித்து நிற்கிறேனென்பதை இதனாற் சகலருக்குந் தெரிவிக்கின்றேன்.

K. கனகரத்தினம்

வட்டுக்கோட்டை, 16-9-1946

(Misc. 133 20-9-46)


## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

இனிது வார்த்தையாடிக்கொண்டிருந்தாள்.

### "ஆசிரியை தேவை'

விசுவநாதன் விசாலாட்சி முதலியோர் பின்னருஞ் சிலவாரம் அங்கே தானே தங்கியிருப்பதற்காகிய ஒழுங்குகள் செய்யப்பட்டன; அவர்களும் அதற்கு உடம்பட்டுக் கொண்டார்கள்; இப்படியிருக்க, ஒருநாள் இராமச்சந்திரன் கையிலே ஒருதினசரிப் பத்திரிகையுங் கொண்டு, தன் அபிமானப் பிதா வீட்டிற்கு வந்தான்; வந்தவன் அந்தப் பத்திரிகையில் இடப்பட்ட விளம்பரத்தை வாசித்துக் காட்டினன்: அதில், சமீபத்திலுள்ளதாகிய ஒரு வித்தியாசாலையிற் பயிலும் பெண் மாணவர்களுக்குச் சங்கீதமும் பரதநாட்டியமும் பயிற்றுதற்காகிய ஒரு ஆசிரியை தேவையெனவும், திறமைக்குத் தக்க வேதனங் கொடுககப்படுமெனவும் வரையப்பட்டிருந்தது. இதனை வாசிக்கக் கேட்டுக்கொண்டிருந்த அபிமானப் பிதா இராமச்சந்திரனைப் பார்த்து "எங்களிடத்தில் இதற்காகிய ஆள் எவருமில்லையே" எனலும் 'அப்படியல்ல, ஐயா, எங்களுடைய இங்கிதத்திற்கு இந்த உத்தியோகத்தை ஒழுங்கு செய்யலாமென யோசிக்கிறேன்; மேலும் அங்கே தலைமையாசிரியராகவுள்ள சூரிய நாராயணசாஸ்திரியார் எனக்கு நண்பர்; மூத்தியும் என் சகபாடியாயுள்ளவர்" என்றான். "அது சரி, ஆனால் இங்கிதத்திற்குச் சங்கீதம் பரதநாட்டியமென்னுமிவைகள் வருமா' என்று அபிமானப் பிதா கேட்க, "அந்தப் பெண் இவ்வித்தைகளில் மகா நிபுணை" என்றான் இராமச்சந்திரன், "அது எனக்கு வெகு சந்தோஷம்; ஆனால், இங்கிதம் இதற்கு உடன்படுவாளோ" என்று அவர் கேட்க, இராமச்சந்திரன் "உடன்படக்கூடுமென்று தான் நினைக்கிறேன்; ஆனாலும் நேரிற்கேட்போம்" என்றான்; அவர் இரஞ்சிதம் மூலமாக இங்கிதத்தைத் தம் முன்னிலையில் வருவித்து, விஷயத்தைத் தெரிவித்தார். இங்கிதம் உங்களெல்லாருக்கும் சம்மதமானால், எனக்கும் சம்மதந்தான்" என்று விநயமாக விடைகூறும்போது இரஞ்சிதத்தின் முகத்தைப் பார்க்க, அவள் தனக்கும் பூரண சம்மதமென்றாள். உடனே இராமச்சந்திரன் ஒரு விண்ணப்பப் பத்திரத்தை இங்கிதத்தைக் கொண்டெழுதுவித்து, அன்றுமாலைக் காலத்திலே, சூரிய நாராயண சாஸ்திரியார் வீட்டிற்குச் சென்று விஷயத்தைச் சொல்லி, விண்ணப்பப்பத்திரத்தைக் கொடுத்தான்; அவர் அதனை ஏற்றுப் படித்துப் பார்த்து, இராமச்சந்திரனை நோக்கி, "வேறு விண்ணப்பப் பத்திரங்களும் இந்த விஷயமாக வந்துள்ளன; அவைகளைக்காட்டிலும் இது சிறந்ததுபோற் காணப்படுகின்றது; அல்லாமலும் நீர், தக்காரொருவர் தரும் விண்ணப்பப் பத்திரத்தைத்தான் இங்கே கொண்டுவந்து தருவீரென்பதை நான் அறிவேன்……" என்று தொன்மை பாராட்டிப் பேசினார்; இராமச்சந்திரனும் சிறிது நேரம் அவருடன் பேசிவிட்டு, "இந்தவிஷயமாக இன்னும் நான் செய்யவேண்டியதேதுமுண்டோ" என்று கேட்க, சாஸ்திரியார் "வேறொன்றுஞ் செய்யவேண்டியதில்லை; இந்த மாசம் 25-ந் திகதி பகற் பத்துமணி வரையில், இவ்விஷயமாக விண்ணப்பஞ் செய்துள்ள பெண்களை எங்கள் கலாசாலைக்கு வரச்செய்து, ஒரு பரீட்சை நடத்தித் திறமை வாய்ந்தவளையே ஏற்றுக்கொள்ள உத்தேசித்திருக்கிறோம். அந்தச் சமயத்தில் உமக்குத் தெரிவிப்பேன், அந்த அம்மாளை இங்கே வரச் செய்யலாகுந்தானே" என்று கேட்க, "ஆம் வரச்செய்யலாம், அதற்கொரு தடையுமில்லை" என்று சொல்லிச் சாஸ்திரியாரிடம் விடை பெற்றுக்கொண்டு மீண்டான் இராமச்சந்திரன். —வரும்

## கால நிலை

யாழ்ப்பாணப் பகுதியிலே சென்ற பத்து மாசங்களாகப் பெருமழை பெய்யவில்லையெனலாம். இப்பொழுது சிற்சில பகுதிகளிலே மழை தூறியுள்ளது: இங்குள்ள விவசாயிகள் பலர் நெல் விதைத்தற்கு மழையை எதிர்பார்த்தவண்ண மிருப்ப, சிலர் புழுதி விதையிட்டுவிட்டு வானத்தைப் பார்த்தவண்ண மிருக்கக் காணப்படுகின்றார்கள்: சிலவாரங்களாக இப்பகுதியில் வெயிலும் இராக்காலத்திற் குளிரோடு கூடிய காற்றும் நிகழ்கின்றன; தென்னை முதலாம் பெருமரங்களும், பல மாசங்களாக மழை பெய்யாமையினால், பயன்றருவதின்றிச் சோர்ந்தபடி நிற்கின்றன; பலவகையான ரோகங்களும் இங்கே பரவியுள்ளன; "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்பது பழமொழி.

### அக்கரைப்பற்றில் பாரதிவிழா

அக்கரைப்பற்றுச் ஸ்ரீ கணேசாநந்த சபையின் ஆதரவில் ஸ்ரீ ராமக்கிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் செப்ரெம்பர்மீ 14ந் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாயது.

அலங்கரிக்கப்பட்ட பாரதியார் திருவுருவப்படம் மேள வாத்தியத்தியத்துடனும் பாரதிகீதம் பாடிக்கொண்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலம் முடிந்து பாடசாலை அடைந்ததும் சகலருக்கும் சந்தனம், பன்னீர், தாம்பூலம் வழங்கப்பட்டன. சரியாக 6 மணிக்கு திரு S தர்மரெத்தினம் MSC அவர்களின் தலைமையில் கூட்டமாரம்பமாயது. முஸ்லிம் சகோதரர் அதிகம்பேர் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவ்வமயம், திரு M சிவநேசராசா, பண்டிதர் V S கந்தையா, திரு K கணபதிப்பிள்ளை F R G S அவர்கள் சொற்பொழிவாற்றினர். முறையே செல்வன் G பாலசுப்பிரமணியம், திரு S விஞசித்தம்பி (சங்கீதபூஷணம்) திரு V தல்லையம்பலமவர்கள பக்க வாத்தியங்களுடன் பாரதிபாடலில் இசைவிருந்தளித்தனர்.

கடைசியாகப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் க. நடராசன் சபையோருக்கு நன்றியுரை கூறியபின் தேவார பாராயணத்துடன் கூட்டம் 9 மணிக்கு இனிது கலைந்தது.

### அரசியல் நிர்ணயசபைக் கூட்டம்


இந்திய அரசியல்நிர்ணயசபையின் முதலாவது கூட்டம் வருகிற டிசெம்பர்மாதம் 9ம்திகதி கூட்டப்படுமென்று உத்தியோக சம்பந்தமான அறிக்கை கூறுகிறது.

## முஸ்லிம் லீக்கை ருஷியா ஆதரிக்காது

இந்திய முஸ்லிம் லீக்கினரிற் சிலர், தம் பாகிஸ்தானக் கொள்கைக்கு ஆதரவு பெறுதற்காக ருஷியாவை நாடி நிற்கின்றனர். ஆனால் இப்படியாக இந்தியாவைத் துண்டாடும் நியாயமற்ற கொள்கைக்கு ருஷியா ஒருபோதுஞ் சம்மதிக்கமாட்டாது என்று பிரபல ருஷியப் பத்திரிகையான "நியுரைம்ஸ்" பத்திரிகை கூறி, முஸ்லிம் லீக்கினரை ஏளனம் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகச் சிறந்த புதிய ஆர்மோனியங்கள்



விலைக்கிருக்கின்றன

**எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்**

சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்

**கல்கத்தா மோகன புளூட் ஆர்மோனியக் கொம்பனி,**

484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(Mis 98 28 6—28-9) (வெ)






எங்கும்

கியாதிபெற்ற

எமது

**ரேடியோ பீடிகளையே**

எப்பொழுதும்

உபயோகித்து

ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எல்லாஊர்களிலும் கிடைக்கும்

**மொடேண் ஏஜென்சீஸ்,**

சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி செப் 21

காலை: 7 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருப்பாப்பலியூர் வி. ராஜு ஐயர் வாயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி டி சரஸ்வதி பாட்டு 8-30 சித்ரகானம் 9 முடிவு.

1 'திருப்பாப்புலியூர் வி ராஜம்ஐயர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்லூரிக் குறிப்புகள் 2-15 திருப்புணித்துறை ஜி விச்வநாத பாகவதர் பாட்டு 2.45 முடிவு.

மாலை 5 திருப்புணித்துறை ஜி விச்வநாத பாகவதர் பாட்டு 5-40 திருவரங்கத் தத்தாகி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி டி சரஸ்வதி பாட்டு 7.15 ராணுவத்திலிருந்து திரும்பியவருக்கு வசதிகள் பேச்சு 7.30 தமிழில் செய்திகள் 7-45 மதாசில் உள்ளாடி (டி ஆர் மகாலிங்கம் புல்லாங்குழல்) 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி ஜி சங்கரநாராயணன் புல்லாங்குழல் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 இசைவேளை 10 எம் கே தியாகராஜபாகவதர் இசைத்தட்டு 10.30 முடிவு.

### ஞாயிறு செப் 22

காலை: 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கடலூர் டி வேணுகோபால் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருவீழிமிழலை சகோதரர்கள் நாகஸ்வரம் 8-30 ஜே ஸாம்ராஜ் புல்லாங்குழல் 9 முடிவு

12 கதம்பம் 12-30 விருந்தில் ஸ்ட்ரைச் நாடகம் 12-45 ஸ்வாமிராமன் டபத்சில் சம்யுக்தை: இசைநிகழ்ச்சி 1 பணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண் உலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 மின்னிசை 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை: 5 கும்பகோணம் ஆர் தங்கவேலு பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 கடலூர் டி வேணுகோபால் பாட்டு 7.15 ரேடியோ அறிமுகம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 கும்பகோணம் ஆர் தங்கவேலு பாட்டு 8.30 ஜே சாம்ராஜ் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில்செய்திகள 9.15 வாத்யகோஷ்டி 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 முத்துத் தாண்டவர் விழா 10-30 முடிவு.

### திங்கள் செப் 23

காலை 7.15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 நாமகிரிபேட்டை கே கிருஷ்ணன் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 புதிய பாடல்கள் 8-30 வி கே வேலுக்குட்டிநாயர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 வி கே வேலுக்குட்டி நாயர் பாட்டு 2 தமிழில செய்திகள் 2 05 வி கே வேலுக்குட்டி நாயர் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 நாமகிரிபேட்டை கே கிருஷ்ணன் நாகஸ்வரம் 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 தாள வாத்யக் கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சாவூர் லக்ஷ்மி நாராயண பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 கானலோலா வீணை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 முத்துதாண்டவர் விழா 10-30 முடிவு

### செவ்வாய் செப் 24

காலை 7 15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 மன்னார்குடி எஸ் நாகநாதய்யர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 சித்ரகானம் 8.30 கமலா, பாகீரதி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கமலா, பாகிரதி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கமலா, பாகீரதி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 டி கே பாலகணேசய்யர் புல்லாங்குழல் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7.15 எதிர்கால சேமிப்பு பேச்சு 7.30 தமிழில்செய்திகள் 7-45 மன்னார்குடி எஸ் நாகநாதய்யர் பாட்டு 8-30 டி கே பாலகணேசஐயர் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில செய்திகள 9.15 தென்னிந்திய நாட்டுப்பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

## ஓர் வேண்டுகோள்

### ஊர்காவற்றுறையில் தண்ணீர்க் கஷ்டம்

ஊர்காவற்றுறைப்பகுதி மாரியும் கோடையும் தண்ணீர் இல்லாத இடமாயிருக்கிறது. இந்தப் பெருங் குறையினல் ஊர்காவற்றுறைப் பகுதிக்கு வந்து செல்லும் எழுதீவுப் பகுதி மக்களுக்கும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத குறை இன்றுவரையும் இருக்கிறது துன்பமான இந்த நிலையை பல தீவுப்பகுதிகளின் தலைவர்களுக்கும் பிரபுக்களுக்கும் ஏனைய அன்பர்களுக்கும் அடியேன் மூன்று வருட காலமாக எடுத்துச் சொன்னேன் அவர்களின் உடம்பாட்டுடனும்கையெழுத்துக்களுடனும் வடமாகாண ஏசண்டுத் துரையவர்களிடம் தற்காலீகமாகவாவது இடம் ஒன்று உதவவேண்டுமென்றும் விண்ணப்பித்தேன். அவரின் உதவியினல் ஊர்காவற்றுறைப் பகுதியில், ரேகுக் கந்தோருக்குச் சமீபத்தில் இடமொன்று கிடைத்தது. அதன்பேருகவும் ஊரவர்களின் உதவியினுலும் இப்போது மூன்று மாதமாகக் குடிதண்ணீர் உதவப்பெற்று வருகின்றது இச் சிறுமுயற்சியைப் பெரிதாக்கவும் அதன் விளைவாக ஓர் ஒழுங்கான திட்டத்தை நிறைவேற்றவும் எழுவுப் பகுதி மக்களின் ஆலோசனையும் வேண்டப்படுகின்றது.

அதன்பின்பு பொதுமக்களின் ஆலோசனையுடன் சபையொன்று கூட்டி நிரந்தர ஒழுங்குகள் செய்யவும் அதன் பேருக ஒழுங்காகத் தண்ணீர் கொடுக்கும் வசதியைச் செய்யவும் பொதுமக்களாய உங்களின் ஆலோசனைகளை உதவுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,

விஞசித்தம்பி இளையதம்பி

காரம்பன்,

23.8-46


### தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம். சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26 4-46—25-10-46 (வெ)



## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



## ஜீவாதார வைத்திய விளம்பரம்

நாடிப் பரீட்சையுடன்
3 நாள் 6 வேளை மருந்து 10 ரூபா
ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம் இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரம் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,

க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்

(Mis 160 30-8—30-11-46)



## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பரீட்சைக்கும், ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு ஷை நூல் ஆசிரியர் அவர்கள் செய்த பல திருத்தங்களோடு

**யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்**

வெளியீடாக அச்சிடப்படுகின்றது.

கூடியசீக்கிரம் வெளிவரும்

**மானேஜர்,**

சைவப்பிரகாச யந்திரசாலை,


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மென்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday September, 20, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org